**தலைப்பு 264 – யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 264 – யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ் விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பவை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டின் பந்திக்கான தொடர்பு | பரிந்துரைகள் | மீளாய்வாண்டின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(ஒ) | தனியார் காணி அரசாங்கத்தால் பாரதீனப்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் | 1.6.1(அ)(i) |
| 1.6.1(ஏ) | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 1.6.1(அ)(ii) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | காரைநகர் பிரதேச செயலகம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணி தனியாருக்குச் சொந்தமானதாக இருந்த போதிலும் அவ் ஆதனத்தின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 60.14 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காணியினைப் பராதீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நாளதுவரை நலிவடைந்திருந்தன. | காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | காணியை பாரதீனப்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களுக்குரித்தான ஆதனங்கள், வாகனம் மற்றும் உபகரணங்களின் 47 உருப்படிகள் கூட்டுமொத்தம் ரூபா 89,870,618 மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்களாக காட்டப்பட்டிருக்காமையால் நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி அதே தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறித்த சொத்துக்களை சிஹாஸ் (Cigas) மென்பொதியில் தரவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரித்தாக்கப்பட்ட அத்தகைய சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் (ACA–F) மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு கூட்டுமொத்தம் ரூபா 11,991,950 காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் அச்சுப்பதிப்பின் (SA82) பிரகாரம் கூட்டுமொத்தம் ரூபா 90,206,314 ஆகக் காட்டப்பட்டிருந்தமையினால் வேறுபாடு கூட்டுமொத்தம் ரூபா 78,214,364 அவதானிக்கப்பட்டது. | நிலையான சொத்துக்களின் கொள்வனவு பெறுமதி அரச கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு சீர்செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலையான சொத்துக்களின் கொள்வனவு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டிற்கான திறைசேரியின் அச்சுப்பதிப்பின் (SA 82) பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் அகற்றல் கூட்டுமொத்தம் ரூபா 398,085,601 காட்டப்பட்டிருந்த போதிலும் மாவட்டச் செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களின் புதிய சிஹாஸ் சொத்துக்கள் பட்டியலில் (New Cigas Assets List) கூட்டுமொத்தம் ரூபா 398,576,087 ஆக காட்டப்பட்டிருந்தமையால் வேறுபாடு கூட்டுமொத்தம் ரூபா 490,486 காணப்பட்டது. | நிலையான சொத்துக்களின் அகற்றல் பெறுமதி அரச கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு சீர்செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலையான சொத்துக்களின் அகற்றல் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (v) | மாவட்டச் செயலகம் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்குரித்தான 35 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 35 வாகனங்களின் பெறுமதிகளை மீள்மதிப்பீடு செய்து நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றால் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 2,132 பயனாளிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முறையே பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான முறையே வட்டி மற்றும் வட்டியல்லாக் கடன்கள் ரூபா 602,420 மற்றும் ரூபா 32,761,569 பயனாளிகளிடமிருந்து 02 தொடக்கம் 12 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்காது இருந்தன. | அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவைகள் உரிய காலப்பகுதியில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப்பிரமாணம் 115(4),(5) | 421,109 | இரு வருட காலத்திற்கு முன்னரான காலப்பகுதிக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த பல்வேறுபட்ட காலங்கடந்த கொடுப்பனவுகளுக்கு உரிய அமைச்சு செயலாளரிடம் அனுமதி பெறப்பட்டிருக்காது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் அவ்வாறு அனுமதி பெறப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் அனுமதி பெறப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 29.5.2 ஆம் பந்தி | 08 பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் 11 சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக 25 கடமை புகையிரத ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. | தாபன விதிக்கோவையின் படி எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக ளுக்கான பிரயாணச் செலவுகள் அப் பரீட்சைகளில் சித்தியடைந்த பின்னர் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**2.3 முற்பண வழங்கலும் மற்றும் தீர்ப்பனவும்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 ஒய்வுபெற்ற மற்றும் 02 இறந்த அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டிய இடர்கடன் கூட்டுமொத்தம் ரூபா 721,227 தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்க 03 மாதங்கள் தொடக்கம் 03 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்தும் பிணையாளியிடமிருந்தும் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இடர்கடன் நிலுவைகள் அறவிடப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே இரு வேறுபட்ட அமைச்சுகளினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 2021 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தம் ரூபா 196,039,247 கிரயத்தில் மாவட்டச் செயலகத்தினால் பராதீனப்படுத்தப்பட்டிருக்காத காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் நாளதுவரை மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதும் இந் நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | பொருளாதார மத்திய நிலையத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நேர்முன்னைய வருடத்தில் மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களினால் சௌபாக்கியா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நிறைவேற்றப்பட்டிருந்த 06 வகையான உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான கட்டிட புனரமைப்பு மற்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கைத்தொழில் உபகரணங்கள் கூட்டுமொத்தம் ரூபா 29,713,780 நாளதுவரை குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்காது கைவிடப்பட்ட நிலையிலுள்ளமையால் அங்குள்ள கிராமங்களில் வாழும் குறைந்த வருமானப் பயனாளிகளின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் காணப்படவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான கட்டிட புனரமைப்பு மற்றும் கைத்தொழில் உபகரணங்களினை பயன்படுத்துவதற்கும் குறைந்த வருமானப் பயனாளிகளின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |
| (இ) | விதவைகள் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதி கூட்டுமொத்தம் ரூபா 1,134,171 அத்தகைய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதார சுழற்சிக் கடன்கள் வழங்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது 08 பிரதேச செயலகங்களினால் அரச வங்கிகளின் கணக்குகள் மற்றும் சமுர்த்தி வங்கி கணக்குகளில் 02 தொடக்கம் 09 வருடங்களாக தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | இனிவருங்காலங்களில் மேற்படி வைப்புக்களை உரிய முறையில் கடன் வழங்கி மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | உரிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதார சுழற்சிக் கடன்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். மேலும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திருநெல்வேலியில் பால் பதனிடல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான தொழிற்சாலை நிர்மாணம் மற்றும் பதனிடல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் ஒப்பந்தக்காரருடன் கூட்டுமொத்தம் ரூபா 56,640,750 ஒப்பந்தக் கிரயத்தில் | ஒப்பந்தக்காரரினால் உரிய நேரத்தில் நிறைவு செய்யமுடியாது போனமையால் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாத ஒப்பந்ததாரரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு செயலாற்றல் பிணைமுறியினை |

| | | |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைக்கமைவாக மாவட்ட செயலாளரினால் கூட்டுமொத்தம் ரூபா 4,911,486 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நாளதுவரை தேவைப்படுத்தப்பட்ட பிரதானமான உபகரணங்கள் ஒப்பந்க்காரரினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமையால் இச் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2019 மார்ச் 28 இல் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய இச் செயற்பாடுகள் நாளதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவோ அன்றேல் செயலாற்றல் பிணை முறி ரூபா 4,822,238 காசாக்கப்பட்டு அரசிறைக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவோ மாவட்டச் செயலாளரினால் நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பணமாக்கி அரசாங்க வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு கூட்டுமொத்தம் ரூபா 75,323,600 கிரயத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டிய சுன்னாகம் மலக்கழிவு மீள் சுழற்சியிடல் செயற்திட்ட வேலைகளுக்குரிய ஒப்பந்ததாரருக்கு நாளதுவரை கூட்டுமொத்தம் ரூபா 9,368,219 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வேலை நிறைவேற்றப்பட்டிருக்காமையினால் மலக்கழிவுகள் மீள் சுழற்சிக்குட்படுத்தப்பட முடியாதிருந்தது. | ஏற்படுத்தப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய எம்மால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வேலைகள் நிறைவேற்றப்பட்டு செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம், வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செயலகங்களின் கட்டடங்களின் கிரயம் கூட்டுமொத்தம் ரூபா 48,299,000 மற்றும் 2018 ஆம் ஆண்டு நிலசெவன திட்டத்திற்கமைவாக 07 பிரதேச செயலகங்களால் கூட்டுமொத்தம் ரூபா 30,830,235 இற்கு | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அத்தகைய அலுவலகங்களின் காணிகளை பராதீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

நிர்மாணிக்கப்பட்டிருந்த கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் இதர உத்தியோகத்தர்களுக்குரிய 12 அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலம் 2021 மார்ச் ஆம் திகதியிடப்பட்ட 05/2021 ஆம் இலக்க உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு சுற்றறிக்கையின் பந்தி 2.1 இன் பிரகாரம் மாவட்ட செயலாளருக்கோ அல்லது பிரதேச செயலாளருக்கோ உரித்தற்றிருந்தது. எவ்வாறாயினும் அத்தகைய தனியார் நிலங்களை உரித்தாக்கிகொள்வதற்கோ அல்லது பராதீனப்படுத்துவதற்கோ நாளதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் மட்ட பதவியணிக்குரிய 04 பதவிகளைச் சேர்ந்த 41 உத்தியோகத்தர்களுக்கு 13 பிரதேச செயலகங்களில் ஆளணி வெற்றிடங்களாக விடப்பட்டு வேறு 11 பிரதேச செயலகங்களில் அத்தகைய பதவிகளுக்குரிய 22 உத்தியோகத்தர்கள் மிகையாக இணைக்கப்பட்டிருந்தமையால் அவர்களால் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய கடமைகள் பரவலாக்கப்பட்டிருக்க மாவட்ட செயலாளரினால் நாளதுவரை ஆக்க” ர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறுபட்ட காரணங்களால் ஆளணியை பரவலாக்க முடியாதிருந்தது. | பதவியணியில் வினையாற்றல் மிக்கதாகப் பரவலாக்கப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 06 பிரதேச செயலகங்களில் 06 தொடக்கம் 17 வருடங்கள் கடமையாற்றி வந்த இணைந்த சேவைகள் பதவியணியைச் சேர்ந்த 123 அலுவலர்கள் 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதியிடப்பட்ட 18/2001 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கைக்கமைவாக இடமாற்றப்பட்டிருக்காது தொடர்ந்து ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேலாக சேவையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். | உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் அறிவிக்கப்பட்டமையால் இடமாற்றத்தின் மூலம் ஆளணி சீராக்கம் செய்யமுடியவில்லை. | இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக ஆளணியினர் பரவலாக்கப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |